பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 27 சனிக்கிழமை (11-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 46

# பொன்னாலைப் பாலத்தில் பல காவலரண்கள் தகர்ப்பு!

## 10 படையினர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 11

**காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் அமைந்திருந்த ஶ்ரீலங்கா இராணுவத்தின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளின் "சாள்ஸ் அன்ரனி" சிறப்புப்படை அணி நேற்று அதிகாலை 1.30 மணியளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியது.**

**இந்தத்தாக்குதலில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.**

நேற்று அதிகாலை நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலின் போது காவலரணில் இருந்து உயிர்தப்பிய படையினர் பின்வாங்கி வலந்தலைப் பகுதியை நோக்கி ஓடித் தப்பினர்.

இந்தத் தாக்குதல் சில மணி நேரம் நீடித்தது.

தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டதை அடுத்து வலந்தலைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

பொன்னாலைப் பாலத்தில் காவலரண்கள் தகர்க்கப்பட்ட சம்பவத்தின் போது பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ ரி 69 ரக ஆர். பி. ஜி | —01 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிகள் | —02 |
| ★ 60 எம். எம். மோட்டார் | —01 |
| ★ ரி81 ரகத் துப்பாக்கி | —03 |
| ★ ரி56 பட்மொடல் துப்பாக்கி | —02 |
| ★ ரி56—2 ரகத் துப்பாக்கி | - 02 |
| ★ சிக்னல் பிஸ்டல் | —01 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைத்தொடர் | —868 |
| ★ ஏ. கே. ரவைக் கூடுகள் | —18 |
| ★ ரி81 ரவைக் கூடுகள் | —05 |
| ★ 60 எம். எம். ஷெல்கள் | —20 |
| ★ 60 எம். எம். மோட்டார் ஸ்கோக் | —01 |
| ★ ஆர். பி. ஜி. பிறவ்ளர் | —03 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல்கள் | —06 |
| ★ சிக்னல் காட்ரஜ் | —04 |
| ★ ரம் மகஸின் | —09 |
| ★ ஐ. எம். ரவைகள் | —1,9 50 |
| ★ ஜே. ஆர். ரக கிரனேட் | —14 |
| ★ தொலை நோக்குக் கருவி | —01 |
| ★ தொலைத் தொடர்பு கருவி | —01 |

(உ-3-15-165)

## பலாலியில் ஷெல்

யாழ்ப்பாணம், ஜன. 11

பொன்னாலையில் காவல் அரண்கள் தாக்கப்பட்டதை அடுத்து, நேற்று அதிகாலை 2 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து சுற்றுப்புற பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

குப்பிளான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

(உ-15

## தேசத்துரோகக் குற்றம்: மூன்று பேர் புலிகளால் கைது

யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் தேசத்துரோக செயல்களைப் புரிந்த குற்றத்தின்மீது மூன்று பேர் தற்போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் செயலகத்தில் நேற்று மாலை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பாவரசன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அதுபற்றி விளக்கமளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டம் முதல் இருந்து காட்டிக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### பிரிட்டன் வழங்கிய

## "அவ்ரோ" பயணி விமானம் குண்டு வீச்சுக்கு பாவிப்பு?

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றிடம் இருந்து "அவ்ரோ" பயணிகள் விமானம் ஒன்றையே கடந்த வாரம் ஶ்ரீலங்கா கொள்வனவு செய்தது. அந்த விமானம் இராணுவத் தேவைகளுக்காக வழங்கப்படவில்லை.

அந்த விமானத்தை ஶ்ரீலங்கா கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டதால், இராணுவ தளபாடங்களை ஶ்ரீலங்காவுக்கு வழங்கும் டயத்தில் பிரிட்டன் விதித்த தடை நீக்கப்பட்டு விட்டதாகக் கருதக் கூடாது.

—இவ்வாறு பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் கூறியதாக பி. பி, ஸி. தெரிவித்தது.

"ஶ்ரீலங்கா அரசு மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தொடர்ந்து அமுலில் உள்ளது. இந்த விடயத்தில் பிரிட்டிஷ் கொள்கையில் மாற்றம் இல்லை,"

—என்றும் அந்த அதிகாரி கூறினார்.

பிரிட்டன் நிறுவனம் வழங்கிய பயணிகள் விமானத்தை ஶ்ரீலங்கா அரசு வடக்கு—கிழக்கில் குண்டு வீச்சுக்குப் பயன்படுத்துவதாக பி. பி. ஸி. கருத்துத் தெரிவித்தது.

[உ-3]

## மண்டைதீவு ஷெல்லினால் குருநகரில் வயோதிபர் பலி!

### சிறுவன் கால் இழப்பு!! சிறுமி படுகாயம்!!!

யாழ்ப்பாணம், ஜன. 11

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 6 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் யாழ். குருநகரில் விழுந்து வெடித்ததில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். சிறுவன் ஒருவனின் கால் துண்டிக்கப்பட்டது; சிறுமி காயமடைந்தாள்; சில வீடுகள், கடை மற்றும் வாடி என்பன சேதமடைந்தன.

மூன்று ஷெல்கள் நேற்று மாலை குருநகரில் விழுந்து வெடித்தன.

கடற்கரைப் பக்கமாக மீன் வாடி ஒன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வாடிக்குள் படுத்திருந்த மனுவேல் இரத்தினம் (வயது 60) என்பவர் உயிரிழந்தார். படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட அவர் அங்கு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போது உயிரிழந்தார்.

வேளாங்கண்ணி மாதா கோவிலடியில் விழுந்த மற்றைய ஷெல்லினால் அப்பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனான புஷ்பம் ரவிக்குமார் [வயது 8], சின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வந்த மருந்து; விலை நிர்ணயிக்கப்படும்

'குமண' கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கென எடுத்து வரப்பட்டுள்ள மருந்து வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படவுள்ளது.

இதற்கென எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும்.

கப்பல் மூலம் எடுத்துவரப்படும் அத்தியாவசிய மருந்து வகைகளை நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வது என்று முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியே இம்முறை விலைநிர்ணயம் செய்யப்படவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் மற்றும் பிராந்திய சுகாதார வைத்தியப் பணிமனைப் பிரதிநிதி, யாழ். ஆஸ்பத்திரிப் பிரதிநிதி, வட இலங்கை மருத்துவ சங்கப் பிரதிநிதி, தனியார் மருந்தகங்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்று கூடி மருந்து வகைகளின் விலைகளை நிர்ணயிக்க உள்ளனர். [அ-5]

## முச்சந்தி முரளி



பயணிகள் விமானத்தை பலி எடுக்கிற விமானமாய்ப் [illegible] காரருக்கு விளங்கவில்லைப் போலை......!

### 3 மெகா வாற்ஸ் மின்சாரம்

## சுழற்சி முறையில் கூட வழங்குவதற்குப் போதாது

யாழ்ப்பாணம், ஜன. 11

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று மெகாவாற்ஸ் மின்சாரம், மாவட்டத்தில் உள்ள பகுதிகளுக்கு சுழற்சி முறையிலேனும் வழங்குவதற்குப் போதுமானதாக இருக்கமாட்டாது.

இவ்வாறு மின்சார சபையின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்போது மின்சார திருத்த வேலைகள் மாங்குளத்தில் நடந்து வருவதாகவும், அவ்வேலைகள் முடிந்த பின்னர் கிளிநொச்சியில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் —

அங்கு திருத்த வேலைகள் முடியும் பட்சத்தில் யாழ். மாவட்டத்திற்கு மூன்று மெகாவாற்ஸ் வலுவுள்ள மின்சாரம் விநியோகிக்கப்படும் என்றும் — மின்சார சபைத் தலைவர் என். ஏ. பெரேரா தெரிவிந்திருந்தார்

அந்த மின்சாரம் யாழ்ப்பாண மக்களின் தேவைகளுக்கும் போதுமானதா என்று கேட்டபோதே யாழ். அலுவ

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

### விமான பயண மோசடி:

## இந்திய அதிகாரிகள் சிலர் புலிகளுக்கு உதவினராம்!

புகாரெஸ்ட், ஜன. 11

ரூமேனிய குடிவரவு அதிகாரிகள் சர்வதேச விமான பயண மோசடி ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

இம் மோசடியில் விடுதலைப் புலிகளும், இந்திய குடிவரவுத்துறை அதிகாரிகள் மற்றும் விமான சேவை அதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று ரூமேனியத் தலைநகர் புகாரெஸ்டில் அறிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இரு பெண்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலை முன்னிட்டு ப.நோ.கூ. சங்கள்களில் பயறு

யாழ். செயலகம், தைப் பொங்கலை முன்னிட்டு நிர்ணயிக்கப்பட்ட விலையில் தானிய வகைகளை ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது.

சகல ப. நோ. கூ. சங்கங்களும் அவற்றினைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன.

வெளிச்சந்தையில் 50 ரூபாவுக்கு மேல் விறபனையாகும் ஒரு கிலோ பயறு 31 ரூபாவாக செயலகத்தினால் ப. நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

இதேபோல ஒரு கிலோ பயற்றம் பருப்பு [35 ரூபா], கடலைப் பருப்பு [50 ரூபா], பட்டாணிக்கடலை [50ரூபா], கௌபி [27 ரூபா] ஆகிய தானிய வகைகளும் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் ப.நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தானிய வகைகள் கடந்த காலங்களில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டவையாகும். [அ-5]


## முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் **தரத்திலும் விலையிலும் குறைந்த போலி** ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

**குறைந்த** விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு **தகுந்த சன்மானம்** அளிக்கப்படும்.

**ஆர். வி.ஜி நிர்வாகம்.**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19273)


## புதிர்ப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 11

உதைபந்தாட்ட விதிகள் பற்றிய புதிர்ப் போட்டி ஒன்று நாளை காலை 10-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இந்தப் புதிர்ப் போட்டியை நடத்துகிறது. [உ]

## பெற்றோருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும், பயில விரும்பும் காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. [அ-5]

## இந்தியா பங்குபற்றாது

புதுடில்லி, ஜன. 11

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ''ஷார்ஜா''வில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் பந்தயங்களில் கலந்து கொள்வதில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது. [உ-த]


அச்சு வேலைகளுக்காக அலைந்து திரியாதீர்கள்

ஒரே இடத்தில் சகல தேவைகளையும்

**பூர்த்தி செய்து கொள்ளலாம்**

- ★ கடிதத் தலைப்பு Letter Heads
- ★ விலாச அட்டை Visiting Cards
- ★ கடித உறைகள் Envelopes
- ★ சுவரொட்டிகள் Posters
- ★ துண்டுப்பிரசுரங்கள் Hand Bills
- ★ புத்தகங்கள் Books
- ★ மலர் வெளியீடுகள் Bulletins

போன்ற சகல ஆங்கில, தமிழ் அச்சு வேலைகளை நாம் வனப்புடனும், சிறப்புடனும்

உரிய நேரத்தில்

செய்து தருவோம்.

**உதயன்**

292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.


## சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்
## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் அளவுகளைக் கொண்ட 20 (இருபது) மரப்பெட்டிகள் தயாரித்து வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 16-01-92 ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன.

**நீளம் - 4 அடி, அகலம் - 3 அடி, உயரம் - 2 அடி**

இப்பெட்டிகள் மூடிகளுடன் பிணைச்சல்களும், பித்தளைக் கொண்டிப் பட்டங்களும் உள்ளனவாக இருத்தல் வேண்டும். அத்துடன் உறுதியான பாரங் குறைந்த 1 அங்குல தடிப்புள்ள பலகையினால் செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர் ஒரு கிழமைக்குள் மேற்கூறிய 20 பெட்டிகளையும் திருப்தியான முறையில் தயாரித்து வழங்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கு முன் மேலும் விபரங்களுக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் 14-01-92 ஆம் திகதி பி. ப. 2.00 மணியளவில் தொடர்புகொள்ளவும்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
10 - 01 - 92

**டாக்டர் ந. கனகசபை**
யாழ். பிராந்திய சுகாதார
சேவைகள் பணிப்பாளர்

[C/1323]


வளமான வாழ்விற்கு
நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

**உங்கள் நிதி வளத்தைப் பெருக்க**
**எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்.**

நிலையான வைப்பு

| காலம் | வட்டி | |
|---|---|---|
| மாதங்கள் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

| | 1987/88 | 1988/89 | 1989/90 |
|---|---|---|---|
| | (ஆயிரம் ரூபாக்களில்) | | |
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 14, 355 | 23, 207 | 23, 636 |
| பொதுமக்கள் வைப்புகள் | 110, 898 | 116, 890 | 141, 748 |
| வங்கிக் கடன்கள் | 6, 540 | 11, 364 | 17, 981 |
| அரசாங்க வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 14, 832 | 13, 700 | 19, 488 |
| வங்கி மீதிகள் | 3, 189 | 1, 894 | 2, 952 |
| மொத்தச் சொத்துகள் | 143, 823 | 162, 240 | 193, 265 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்துமுன் இலாபம் | 23, 174 | 23, 701 | 23, 434 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 20, 025 | 20, 833 | 22, 351 |
| வரி செலுத்தியபின் தேறிய இலாபம் | 3, 148 | 2, 868 | 1, 083 |
| பகிரப்பட்ட இலாபம் | 1, 775 | 1, 508 | 754 |

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இல. NBS/R/90/021.

**பணிப்பாளர் சபை**

எல். பி. ஈ. கருணாரட்ண,
சட்டத்தரணி, சமாதான நீதிவான், (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
ஏ. ஐ. பி. (லண்டன்), முகாமைப் பணிப்பாளர்
ஜே. டி. நவரட்ணம்,
ஏ. ஐ. பி. (லண்டன்), பொது முகாமையாளர்
ஏ. எம். எச். பாரி,
பி. ஏ. (சிறப்பு)
ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விவரங்களைப் பெற

**ஷப்றா**

**யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,**

2, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை,
கொழும்பு 4.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1283]


## 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்:
2
—
10
—
1921



மறைவு:
14
—
12
—
1991

## அமரர் சரவணை முருகேசு
### (சாமியார்)

[பிரபல வைத்தியர், வேலணை மேற்கு]

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு எரிந்து அணைந்த ஒளி விளக்கே! உங்கள் ஊன் உருக்கி எங்களை ஓங்க வைத்த எங்கள் அன்புத் தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

12-1-92 (ஞாயிற்றுக் கிழமை) காக்கைதீவு மடத்தில் நிகழும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், திங்கட் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

நாவாந்துறை வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

[19299]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

பிரிவு 2

ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரை

சகல பாடங்களும் எமது வழமையான Super Grade ஆசிரிய குழுவினால்

கணிதம் — இரா. அருட்செல்வம், குணசிங்கம்
விஞ்ஞானம் — K. விக்கி
தமிழ் — பாலா, திருக்கேதீஸ்வரன்
ஆங்கிலம் — தவபாலன், ஜெயனொளிபவான்
வர்த்தகம் — ராஜன்
சமூகக்கல்வி — பாலா, ராஜன்
சமயம் — தர்மா

ஆரம்பம்: 12-1-92

(ஞாயிறு) 9.00 [சி/1271]



# FRENCH

ஆரம்ப பிரெஞ்சு மொழி சொல்லிக் கொடுக்கப்படும்.

இடம்: வேதாரணியர் வளவு, உடுவில் A. G. A. அலுவலகம் முன்.

[4498]


## பரீட்சை ஒத்திவைப்பு

ஆசிரியர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும், பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்குமான ஆங்கில நிகழ்ச்சித் திட்டத்தின் [ TACEP ] கீழ், கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடக்கும் வகுப்புகளுக்கு விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் பரீட்சை இம்மாதம் 18 ஆம் திகதியே நடைபெறும்.

முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டது போல எதிர்வரும் 15 ஆம் திகதி பரீட்சை நடைபெறமாட்டாது என்று மாநில இணைப்பாளர் திரு. என். தேவபாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (அ)

## வவுனியாவில் நடமாடும் ஜனாதிபதி செயலகம்

அடுத்த நடமாடும் ஜனாதிபதி செயலக சேவை வவுனியாவில் இடம்பெற இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த-எ]


# C. C. A.

யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக கல்லூரி

A/L 92

புவியியல்:
வேலாயுதபிள்ளை
புவியியல் பகுதி III
அபிவிருத்தி புவியியல்

ஆரம்பம்; 12-1-92
1 மணி

[சி/1281]



# SPECIAL ENGLISH

யாழ். பல்கலைக்கழக
முதலாண்டு கலை, வர்த்தக
வெளிவாரி மாணவர்களுக்குரிய

ஆங்கில மொழி போதனை

விரிவான, துரித கற்கை நெறி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 20 — 01 — 1992 மு. ப. 10 மணி

தொடர்பு கொள்க:

நிர்வாகி:
சயன்ஸ் அக்கடமி,
யாழ்ப்பாணம்.

[சி-1274]



# அகிலா

கல்வி நிலையம்

105, ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம்.

1992 - கல்வியாண்டு - 6,7,8,9,10,11 (க. பொ. த)

விஞ்ஞானம் — யேசுராஜ்
கணிதம் — ஸ்பெல்மன்
தமிழ் — திருஞானம்
சமூகக்கல்வி, வர்த்தகம் — திருலோகநாதன்
ஆங்கிலம் — நடராசா

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

[19296]



உ

அகில இலங்கைக் கம்பன் கழகம்

நடத்தும்

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்

# இசையாராதனை

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்.

காலம்: 12 - 01 - 1992 ஞாயிறு

காலை, மாலை

காலை நிகழ்ச்சிகள்

8-30 மணி; ஈழத்தின் பிரபல இசைக்கலைஞர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பஞ்சரத்ன கீர்த்தனைகளை இசைத்தல்.

9-30 மணி: இவ்வாண்டுக்கான "இசைப் பேரறிஞர்" விருது வழங்கல்
பெறுபவர்: நாதஸ்வர வித்துவான் எம். பஞ்சாபிகேசன் அவர்கள்
வழங்குபவர்: பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் [துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்]
கௌரவிப்புரை: சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

10-00 மணி: நாதஸ்வர இசையாராதனை

நாதஸ்வரம்:
திரு. எம். பஞ்சாபிகேசன்
திரு. என். கே. பத்மநாதன்
திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி
திரு. வி. கே. கானமூர்த்தி
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி
திரு. எஸ். சிதம்பரநாதன்
திரு. ஆர். கேதீஸ்வரன்

தவில்:
திரு. கே. நித்தியானந்தம்
திரு. பி. முருகதாஸ்
திரு. ரி. உதயசங்கர்
திரு. எஸ். ராமதாஸ்
திரு. பி. கணேசன்
திரு. ஆர். பாஸ்கரன்

12-30 மணி: தீபாராதனை

மாலை நிகழ்ச்சிகள்

2-30 மணி: மங்கள இசை பிச்சையப்பா, ரவி, ரஜி குழுவினர்கள்

3-00 மணி முதல் 6-00 மணி வரை நிகழும் இசையாராதனையில்
திருவாளர்கள்:
கே. ஆர். நடராஜா, எஸ். கணபதிப்பிள்ளை
எஸ். வேலாயுதபிள்ளை, எல். திலகநாயகம் போல்,
பொன். சுந்தரலிங்கம், என். வி. எம். நவரட்ணம்,
எஸ். இராமநாதன் ஆகியோரும்
ஈழத்தின் பிரபல அணி செய்
இசைக் கலைஞர்களும் கலந்துகொள்வர்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

[சி-1278]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### செல்லப்பா இரத்தினசபாபதி

(சின்னராசா)

[ஓய்வு பெற்ற யாழ். மாநகரசபை மின் ஊழியர்]

ஜனனம்: 1934 - 11 - 01

அஸ்தமனம்: 1991 - 12 - 12

அதிர்ச்சியின் விழிம்பிலே, நாம் தவித்து நிற்கும் வேளையிலே, ஆனந்த எல்லையில் உச்சிமேலிருந்த - உமை காலனவன் வழி மறித்ததேனோ? ஐயா உமைப் பிரிந்து 31 நாட்கள் ஓடி மறைந்தனவோ! உமது அன்பை, அரவணைப்பை ஒரு நொடியும் மறவாது தவிப்பதோடு;

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்கும்;

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

24, அரசடி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[சி-1321]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரம் [Olivetti] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. சுஜீவன், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (19291)

### வீடு விற்பனைக்கு

நாவற்குளி ஸ்ரேசனுக்கு ¼ மைல் அருகாமையிலும், கேரதீவு றோட்டில் சகல வசதியுடன், வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. கருணாகரன், ஐயனார் கோவிலடி, கேரதீவு றோட், நாவற்குளி. (19149)

### நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/1276)

### தவறிவிட்டது

யாழ். பஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட Hero சைக்கிள் காணாமற் போய்விட்டது. இதில் இருந்த பையில் முக்கிய சான்றிதழ்கள் இருந்தன. இதைக் கண்டெடுத்தவர்கள் காவல்துறையிடம் கையளிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [19293]

### இலவச திருமண சேவை

27 வயது, செவ்வாய் 7, A/L படித்தவருக்கு அரச, வங்கி மணமகன் தேவை. நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில் முத்திரைக் கவர்களுடன் விண்ணப்பிக்கலாம். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (19279)

### அம்பாள் திருமண சேவை

29 வயது B. A., 32 வயது B. Sc., 30 வயது I. C. M. A., 30 வயது எலெக்ரோனிக் பொறியியலாளர், 36 வயது வங்கி உத்தியோகத்தர் ஆகியோருக்கு மணப்பெண்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முற்பணம் ரூபா 50. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (19294)

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### சமூகக்கல்வி

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். சமூகக் கல்வி ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்: ந. தர்மபாலன் (சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்) [19243]

### A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L மாணவர்களுக்கான அடிப்படைக் கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்; N. ராஜன், B. Com. யாழ் நகரில் சகல புத்தகசாலைகளிலும், சுன்னாகத்தில் துர்க்கா ஸ்ரேசனறியிலும் பெற்றுக் கொள்ளலாம். விலை 25/-. (சி/1268)

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### மேசை/வாங்கு

கல்வி நிலையத்திற்கு பாவிக்கக்கூடிய வாங்கு, மேசைகள் உடன் தேவைப்படுகின்றன. நியாயமான விலை தரப்படும். C. C. A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/1264]

### மாணவர் விடுகைப்பத்திரம்

கல்லூரி மாணவர் விடுகைப் பத்திரம் கல்லூரி நடைமுறை விதிகளுக்கும் அளவுக்கும் ஏற்ப அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2/-. உயர்ந்த ரகத் தாளில் விலை ரூபா 5/-. இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1279)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினைக்கு உரிய பதில் கிடைக்கும். ஜாதகம், குறிப்பு, எண்சோதிடம், கைரேகை, விவாகப் பொருத்தம் அனைத்திற்கும் தொடர்பு; த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (19260)

### புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம். இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது. (19270)

### பாடப் பதிவேடு

கல்லூரி பாடப்பதிவேடு (Record Book) விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 15/-. இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/1280)

## தமிழீழ காவல் துறை வெற்றிடங்கள்

01. சாரதி (வாகனம் செலுத்துபவர்) / மெக்கானிக்
இலேசான பாரமான வாகனங்கள்
கல்வித் தகைமை:— 8 ஆம் வகுப்பு சித்தி
வயது:— 18 — 40 வரை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும், வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 13-01-92 திங்கள் காலை 9. 00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும்.

02. காவலர் (பொலிஸ்) / சிறைக் காவலர்
கல்வி :— 8 ஆம் வகுப்பு சித்தி
வயது :— 18 — 30 வரை
உயரம் :— 5 அடி 6 அங்குலம்

சான்றிதழ்களுடன் 13-01-92 திங்கள் காலை 9.00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும். ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல் துறை.

(C/1320)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 2-11-1904

மறைவு: 2-1-1990



அமரர்

### இராமநாதர் சுப்பிரமணியம்

முன்னாள் பாடசாலை அதிபர், கிராமச் சங்கத் தலைவர்- நெடுந்தீவு]

திதி: 11 - 01 - 1992

அன்பின் கணவராய், ஆருயிர்த் தந்தையாய், பாசமுறு பேரனாய், பற்றுள்ள சகோதரமாய், இருமொழியும் வல்ல பண்டிதராய் வாழ்ந்து மறைந்தீரையா! உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, குடும்பத்தினர்.

இராசாவின் தோட்ட வீதி,
39/5, யாழ்ப்பாணம். (19269)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 1 — 1957

மறைவு: 28 — 11 — 1991



### செல்வி சிவானந்தி சிவராமலிங்கம்

(எழுதுவினைஞர், கணக்குக்கிளை - யாழ். செயலகம்)

திதி: 11-1-1992

''மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்''

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எல்லோரும் போற்றிப் பாராட்ட வாழ்ந்தாய்! இன்சொல்லுக்கும் உனது சேவைக்கும் மதிப்பளித்த எல்லோரும் உனக்கு நிகர் நீயே எனச் சொன்னார்கள். அம்மா உன்னைப் பெற்றெடுத்த பொழுதிலும் பெருமகிழ்ச்சி கொண்டார். எல்லோருக்கும் நல்லவளாக வாழ்ந்த உனது நினைவுகள் எம் நெஞ்சை என்றும் விட்டகலா. உமது ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

தாய், தந்தை, சகோதரர்,
மைத்துனர், பெறாமக்கள்,
மருமகன், உறவினர்கள்.

''சிவ வாசா'',
கந்தரோடை,
சுன்னாகம். [சி/1313]

## நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 7 — 1926

மறைவு: 21 — 1 — 1991



மதிப்பிற்குரிய மங்கையர் திலகம்

### திருமதி நாகம்மா நல்லதம்பி

[இளைப்பாறிய ஆசிரியை யா/சன்மார்க்க ம. வி. ]

11 வது மாசியம்

ஆண்டொன்று ஆகிவிட்ட தன்புகூர்ந்த அம்மா நீ ஆர்வமோடு
பூண்டுதவம் பெற்றமக்கள், பெறாமக்கள் பேரரொடு பேர்த்தி மாரும்
ஈண்டுறக்க மில்லாது இதுவிதியா வெனக்கணவ னிரங்கி ஏங்க
நீண்டதொரு பயணத்தை நேசித்தாய் இன்றெம்மை நினைந்து வாராய்.
மறக்கவொணாத் தெய்வம்நீ மாசகன்ற பொன்முத்து மாணிக் கம்நீ
உறக்கமின்றிக் கலைபயிற்றி உத்தமராம் மாணவரை உலகிற் கீந்தாய்
பிறக்கமுனஞ் செய்தவத்தால் பேர்புகழை எங்களுக்குப் பெற்றுத் தந்த
இறுக்கவொணாக் கடப்பாடு இதுவம்மா உன்பாதம் இறைஞ்சி நிற்போம்.

பிரிவால் துன்புறும்;
கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [சி/1267]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# பருந்தின் கையில் கோழிக் குஞ்சு

ஆகப் பிந்திய தகவல்களின் பிரகாரம் தமிழகம் சென்ற ஈழத்தமிழ் அகதிகளில் முதலாவது தொகுதியினர் இம் மாதம் 21 ஆம் திகதி திருகோணமலை வந்து சேரவுள்ளனர்.

ஈழத் தமிழ் பிரதேசங்களில் 1990 ஜூன் மாதத்தில் போர் மூண்டதன் பின்னர் சுமார் இரண்டு லட்சம் மக்கள் தமிழகம் சென்றனர்.

தமது உயிரை மட்டும் காப்பாற்றும் ஒரேயொரு நோக்குடன் கடல் தாண்டியவர்கள் அவர்கள். குண்டு வீச்சுக்கும், எறிகணை வீச்சுக்கும் அஞ்சி சிறு வள்ளங்களிலும், பாய்மரத் தோணிகளிலும் குழந்தை குட்டிகளுடன் அகதிகளாக அக்கரை சேர்ந்தவர்கள் பலர்.

இன்னும் திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்கப் படைகள் நேரடியாக நடத்திய அத்துமீறல்கள், அநியாயப் படுகொலைகளுக்கு அஞ்சி ஓடியவர்களும் உளர்.

அவர்கள் அகதிகளாகப் பாக்கு நீரிணையைக் கடந்தபோது தமிழ்ப் பகுதிகளில் இருந்த பாதுகாப்பு நிலைக்கும், இப்போதுள்ள நிலைக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை.

யுத்தம் ஏற்படுவதற்கு மூல காரணமான இனப் பிரச்சனைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இராணுவ நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படுவதால் அமைதி மிகத் தூரத்தே அகல நிற்கிறது. தமிழர் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு என்ற நிலை உருவாகவில்லை. அதனால் தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லை.

ஸ்ரீலங்காவின் அரச படைகள் நாளாந்தம் போர் முரசினை ஓங்கி அடித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், கொழும்பு அரசு தமிழர்களை இங்கு அனுப்புமாறு கேட்க—

சந்தர்ப்பம் பார்த்திருந்தது போல, மனிதாபிமானம், மனித நேயம் எல்லாவற்றையும் மறந்து, இந்தியா மிகவும் மகிழ்ச்சியுடனும், ஆவலுடனும் அவர்களை அனுப்பி வைக்கிறது! இங்குள்ள நிலைமை அறிந்து, இரண்டு லட்சம் அகதிகளில் முப்பதாயிரம் பேர் மட்டுமே திரும்பி வருவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் ஈழத் தமிழ் அகதிகள் திரும்பி வருவதையிட்டு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். இந்தியாவைப் பொறுத்த மட்டில் லட்சக் கணக்கானோரை அகதிகளாக வைத்துப் பராமரிப்பது மிகவும் கஷ்டமான காரியம் தான்.

எனினும் அகதிகள் என்று கருதித் தாங்கள் அடைக்கலம் அளித்தவர்களின் பாதுகாப்பும் ஏனைய வசதிகளும் உறுதி செய்யப்படாதவிடத்து, அவர்களைத் திருப்பி அனுப்புவதானது, தாம் கடந்த ஒன்றரை வருடங்கள் செய்த உதவியை தஞ்சமளித்த மகிமையை, அடியோடு சாய்த்து அபகீர்த்தி உண்டாக்கும் செயல் என்பதை உணர்வதற்கு இந்தியா தவறிவிட்டது.

பருந்திடமிருந்து காப்பாற்று முகமாக அடைக்கலம் கொடுத்து வைத்திருந்த கோழிக் குஞ்சை, 'என்னால் இனி இயலாது, இந்தா நீ போய் இறந்துவிடு' என்று கூறிக் கலைத்து விடுவது போல இந்தியா ஈழத் தமிழ் அகதிகளைக் கலைத்து விடுகிறது!

### காமினிக்கு எதிரான

# புல்ஜின் கடத்தல் வழக்கு: விசாரணை ஆரம்பமானது

கொழும்பு, ஜன. 11

பேராசிரியர் ரால்ப் புல்ஜின் கடத்தல் சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா உட்பட நான்கு பேர் மீது தொடரப்பட்ட வழக்கின் மீதான விசாரணை கடந்த புதன்கிழமை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரி. எம். உனம்புவை முன்னிலையில் ஆரம்பமானது.

1988 ஜூன் 26 ஆம் திகதி கொழும்பில் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நினைவு தின சொற்பொழிவை நிகழ்த்த காரில் சென்று கொண்டிருந்தபோது பேராசிரியர் புல்ஜின் கடத்தப்பட்டார்.

பேராசிரியர் புல்ஜினைக் கடத்த காமினி திஸநாயக்கா ஏற்பாடு செய்தார் என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விசாரணையின் ஆரம்பத்தில் தெரிவித்தார்.

''என்னைக் கடத்தியவர்கள் எனக்கு ஒரு தீங்கும் செய்யப்போவதில்லை என்றார்கள். ஆனால் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைப்பற்றி பேசக்கூடாது என்று என்னிடம் அவர்கள் கூறினார்கள்'' — இப்படி புல்ஜின்ஸ் தனது சாட்சியத்தில் சொன்னார்.

# கடற்படை குறித்து இழுபறி ரஷ்யா - உக்ரைன் லடாய்!

மாஸ்கோ, ஜன. 11

கருங்கடலில் நிலைகொண்டுள்ள — முன்னாள் சோவியத்தின் கடற்படை — யாருக்கு சொந்தம் என்பதில் ரஷ்ய குடியரசுக்கும் உக்ரைன் குடியரசுக்கும் இடையே தீவிரமான கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின், கருங்கடலில் உள்ள கடற்படையின் தளபதிக்கு அனுப்பிய செய்தி ஒன்றில், படையினர் தமது நாட்டுக்கே விசுவாசமாக இருக்கவேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்.

ஆனால் உக்ரைன் அரசாங்கம் கருங்கடல் கடற்படை தனது ஆணைக்குட்பட்டது என்று அறிவித்திருக்கின்றது.

தமது நாடு கடற்படை ஒன்றை வைத்திருக்கும் உரித்துக் கொண்டுள்ளது என்று உக்ரைன் ஜனாதிபதி மேலும் அறிவித்திருக்கின்றார். [உ-எ]

# இசைப் பேரறிஞர் விருது பெறும் பஞ்சாபிகேசன்

இசையும், இறைவனும், தமிழும், பிரிக்கமுடியாத நிலையில் ஒன்றோடொன்று இசைந்து, போற்றுபவர்களை வாழ்விப்பன. இதை நன்கு உணர்ந்த தமிழா அமைப்புக்கள்— பெருங்கோயில்கள் இவற்றைப் போற்றித் தாம் வாழ்ந்தன.

இந் நெறியுணர்ந்து இன்று கலையுலகிற்கு பெருந் தொண்டாற்றிவரும் அகில இலங்கைக் கம்பன் கழகம், ஆண்டு



தோறும் நடத்தும் ஸ்ரீதியாகராஜசுவாமிகள் இசையாராதனை விழாவில், இசைத் துறையையும் இசைக் கலைஞர்களையும் கௌரவிக்க எண்ணி ''இசைப்பேரறிஞர்'' என்னும் விருதை இவ்வாண்டு முதல் வழங்க முன்வந்துள்ளது.

அரசின் புறக்கணிப்பு ஒருபுறமும் மேலைத்தேய நாகரீக மோகம் ஒருபுறமுமாக கலைகள் நலிவுற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் –

பல்கலைக்கழகம் சமூக அறிஞர்களையும் கலைஞர்களையும் கௌரவிக்கவேண்டும் எனப் பல குரல்கள் ஓங்கி, ஒலித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் –

அஞ்சேல் எனக் குரல் கொடுத்து நாமே நம் வளர்ச்சியை முன்னெடுப்போம் என்ற துணிவுடன் கம்பன் கழகம் இசைப்பேரறிஞர் விருதை அறிவிப்போடு களத்தில் நிமிர்ந்து நிற்கின்றது.

இவ்வாண்டு இசைப்பேரறிஞர் விருதை சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் மு. பஞ்சாபிகேசன் அவர்கள் பெறுகிறார்.

நீண்ட குடுமி, நிறைந்த புன்னகை, கனிந்த பேச்சு, இவை இவரது சிறப்பம்சங்கள். வாசிப்பில் மட்டுமன்றி தன் தோற்றத்திலும் மரபை பேணிவரும் பஞ்சாபிகேசனுக்கு வயது 68.

நாதஸ்வர வித்துவான் முருகப்பா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனாய் பிறந்த இவரை சண்முகசுந்தரம்பிள்ளை, மல்லாகம் இராமையா, ''கக்காயி'' நடராஜசுந்தரம், ஐயம்பேட்டை வேணுகோபாலபிள்ளை ஆகிய குருமார்கள் இசையுலகில் ஒளியூட்ட வைத்தனர்.

தம்பியார் - தவில் வித்துவான் நடராஜசுந்தரம். இன்றைய இளங்கலைஞருள் பலராலும் பாராட்டப்பெறும் நாதஸ்வர வித்துவான் நாகேந்திரன், விக்கினேஸ்வரன் ஆகியோர் புதல்வர்கள். இப்படி இவர் தம் குடும்பமே இசைத்துறையில் மூழ்கியதாகும்.

ஏற்கனவே இசைவள்ளல், நாதஸ்வரகலாமணி, நாதமணி, நாதஸ்வரகானவாருதி, ஸ்வர்ணதிலகம் போன்ற பட்டங்களைப் பெற்ற இவர் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பாங்கொக் ஆகிய நாடுகளில் தன் திறமையை நிறுவ, அது கண்டு வெளிநாட்டார் வணங்கி நின்றமை குறிப்பிடத்தக்கது.

பொருத்தமான விருது பொருத்தமானவருக்குக் கிடைக்கின்றது.

தொடர்ந்தும் இவ்வாறே கம்பன்கழகம் நீதி நெறி நின்று விருதிற்குரியவர்களைத் தேர்ந்தெடுக்குமானால், விருதும் கழகமும், விருது பெறும் கலைஞனும் பெரும் பெருமை பெறுவர் என்பதில் ஐயமில்லை.

வாழ்க இசைப் பேரறிஞர் பஞ்சாபிகேசன் அவர்கள்! வாழ்க அவர் தொண்டு.

- க. சிவராமலிங்கம் (பி.ஏ)

# பூஸாவில் உள்ள தமிழர் விடுதலை செய்யப்படுவாரா?

கொழும்பு, ஜன. 11

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இம் மாதம் 21 ஆம் திகதி உயர் நிலை மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டிற்கு ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமை வகிப்பார் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளுக்கு ஆதரவான தி.மு.கவினரைக் கைதுசெய்க!

## வாழப்பாடி கோரிக்கை

சென்னை, ஜன. 11

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கும் ஏனைய திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களையும் பொலீஸார் கைது செய்ய வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கோரினார்.

தி. மு. கழக முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் கைதான சம்பவம் விடுதலைப் புலிகளுக்கும் தி. மு. கவுக்கும் நெருக்கமான உறவு இருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

கடலோரப் பகுதிகளில் டீசல் மற்றும் மருந்துப் பொருள்களைக் கடத்துவதில் இன்னும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்றும், கடலோரப் பகுதி கண்காணிப்பை இன்னும் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். [இ-எ]

# இலங்கையருக்கு வேலைதேடி பிரதமர் வெளிநாடு பயணம்

கொழும்பு, ஜன. 11

எழுபதினாயிரம் இலங்கையருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய பிரதமர் டி. பி. விஜேதுங்கா வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

இப்படி கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமரும் தொழிலமைச்சருமான திரு. விஜேதுங்கா இது தொடர்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

குறிப்பாக பணிப்பெண்களை விட ஆண்களுக்கே தொழில் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

1991 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்பினால் மட்டும் 1,400 கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# கடைசி யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர்!

## அவரே சொல்கிறார்

பிரதேச செயலகங்கள் அந்தந்தப்பகுதி மக்களின் தேவைகளையும், அபிவிருத்திக்குரிய பணிகளையும் சரிவரச் செய்யும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள கச்சேரி தேவையற்றதாகிப் போய்விடும். அதன் விளைவாக, நானே யாழ். மாவட்டத்தின் கடைசி அரசாங்க அதிபராகவும் இருக்கக் கூடும்.

—இவ்வாறு தெரிவித்தார் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர்.

வலி-வடக்கு பிரதேச செயலகத்தை நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துப் பேசிய போதே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வலி-வடக்குப் பிரதேச செயலகம் மல்லாகத்திலும், வலி-தெற்குப் பிரதேச அலுவலகம் உடுவிலிலும் நேற்றுக் காலையில் முறையே 11 மணிக்கும் 10 மணிக்கும் திறந்து வைக்கப்பட்டன.

திறப்பு விழாக்களுக்கு அவ்வப்பகுதிப் பிரதேசச் செயலாளர்களான திரு. கா. சந்திரராசாவும், செல்வி தனுஷா தணிகாசலமும் தலைமை வகித்தனர்.

இரு இடங்களிலும் பெயர்ப் பலகைகளை வடக்கு-கிழக்கு மாகாண உதவி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் திறந்து வைத்தார்.

நிர்வாகத்தை நோக்கி மக்கள் அலைந்த காலம் மாறி, மக்களைத் தேடி நிர்வாகம் செல்லும் காலம் இன்று ஏற்பட்டுள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்— என்று அரச அதிபர் தமது உரைகளில் தெரிவித்தார்.

இரண்டு பிரதேச செயலகங்களின் திறப்பு விழா நிகழ்ச்சிகளிலும் மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன், திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். [அ-68-89-5]

# கப்பலில் வந்த பொருள்கள்; நேற்று விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்டத்தில் உள்ள 13 ப. நோ. கூ. சங்கங்களால் கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று பிரதிக் கூட்டுறவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கப்பலில் வந்த பொருள்கள் முழுமையாக இறக்கப்பட்டு முடியாததால், குறிப்பிட்ட சில பொருள்களுக்கு மட்டுமே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ சர்க்கரை (கிலோ) | -ரூ. 38 |
| ★ பயறு (கிலோ) | -ரூ. 34 |
| ★ ரயர் | -ரூ. 125 |
| ★ ரியூப் | -ரூ. 50 |

**கொப்பிகள்**

| | |
|---|---|
| ★ 40 பக்கம் | -ரூ. 4 |
| ★ 80 பக்கம் | -ரூ. 7 |
| ★ 120 பக்கம் | -ரூ. 15 |
| ★ 160 பக்கம் | -ரூ. 19 |

முதல் ரூ. 20 வரை. (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சப்பாத்தினுள் தங்க பிஸ்கட் கடத்தமுயன்ற இருவர் கைது

கொழும்பு. ஜன. 11

சப்பாத்துக்குள் தங்க பிஸ்கட்டுகளை மறைத்து வைத்து நாட்டுக்குள் கடத்த முயற்சித்த இரண்டு இந்திய இளைஞர்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்திருக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை இந்திய விமானம் ஒன்றில் அந்த இளைஞர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் ஒரு கிலோ எடையுள்ள எட்டு தங்க பிஸ்கட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

[உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலம் தியாகராஜா

திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த திருமதி கமலம் தியாகராஜா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் திருநாவுக்கரசு (செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு), விமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினம் (றியோ கிறீம் ஹவுஸ்), தனலக்ஷ்மி, சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமியும், ஜெகதீஸ்வரன், காலஞ் சென்ற சிவகௌரி, ஜெகதீஸ்வரி மகேசன், ஜெககுமாரன், ஜெயசந்திரன், ஜெயவதி, ஜெயபாஸ்கரன், ஜெயசுதாகரன், உமாதர்சினி, ரமேஸ்குமார், ரூபதர்சினி, யனோசினி, ருசந்தன், சாருலதா, பிரகாஷினி, சுகன், அகலிகா ஆகியோரின் பேர்த்தியும், ஜெகன், குகன், ஜெயந்தன், ஜெனுசா, சிந்துசன், டயானா, சாரா, ஜனாயினி, ஜனனி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-1-1992) சனிக்கிழமை இல. 64, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணிக்கு நல் அடக்கத்திற்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். சகலரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

நா. இரத்தினம்
றியோ நிறுவனம், யாழ்ப்பாணம்.

இல 64,
3ம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[19300]

## வைரமுத்து கணேசமூர்த்தி

வைரமுத்து கணேசமூர்த்தி அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற வைரமுத்து-நாகம்மா அவர்களின் அருமைப் புதல்வரும், விஜயலெட்சுமியின் பிரியமான கணவரும், வினாயகமூர்த்தி, கனகலெட்சுமி, நாகலெட்சுமி, பத்மாவதி, வைத்தீஸ்வரமூர்த்தி [கிராம சேவையாளர், உருத்திரபுரம்], திலகவதி, புண்ணியமூர்த்தி, நடேசுமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராசேஸ்வரி, தம்பிஐயா, சண்முகநாதன், கோபாலபிள்ளை, தர்மலிங்கம், சர்வேசுவரி, செல்வலீலா, மகாதேவன், மங்களேஸ்வரி, சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நா. விசுவலிங்கம் - காலஞ்சென்ற தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற யோகராசா, பத்மநாதன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-1-1992 சனிக்கிழமை [இன்று] பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

கேசாவில் பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (19301)

நா. தம்பிஐயா
புங்குடுதீவு 10.

## செல்லையா தங்கம்மா

நல்லூர் 50/20, செட்டித் தெருவைச் சேர்ந்த செல்லையா தங்கம்மா காலமானார்.

இவர் காலம்சென்ற செல்லையா (அப்புச்சி) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற இருபாலையைச் சேர்ந்த வெ. செல்லையாவின் அன்புச் சகோதரியும், லீலாவதி, வரதராஜா (மின்சார பகுதி, மன்னார் பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சிவதாஸ் (சவுதி அரேபியா), ஜோகராஜா (ஆனந்தி-சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, றஞ்சினி, ஜெயதாஸ், குமாரதாஸ் (கண்ணன் - நீர் விநியோக பகுதி, யாழ். மா. சபை) இராசமணி, மனோகரன் (லங்கா சிமெந்து நிறுவனம்), ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பேத்தியும், சர்மிலா, சர்மிலி, சஞ்சீர், சஞ்சித், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, நிருஜலா ஆகியோரின் அன்புப் பூட்டியும், இருபாலையைச் சேர்ந்த இராசம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [11-01-92] இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சிவானந்தா கபே,
நல்லூர்.

ச. யோகராஜா (ஆனந்தி)

(19302)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 11

கடந்த புதன்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டம் தம்பனை ஆற்றுப் பகுதியில் பதுங்கியிருந்த படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான வேலன் [தயானந்தன் — மட்டக்களப்பு] வீர மரணமடைந்தார்.

[உ-3]

## 105 நாடுகள் அங்கீகாரம்

மாஸ்கோ, ஜன. 11

உலக அரங்கில் புதிதாக தோன்றிய ரஷ்ய நாட்டை இதுவரை 105 நாடுகள் அங்கீகரித்துள்ளன. (இ-எ)

## இடமாற்றம்

தென்மராட்சி, ஜன. 11

சாவகச்சேரி பொலீஸ் நிலைய வீதியில் இயங்கி வந்த தென்மராட்சி உதவிக் கல்வி கோட்ட அலுவலகம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கட்டடமொன்றிற்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. [த-117]

## வாழைநார் பயிற்சி

சாவகச்சேரி, ஜன. 11

செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் மட்டுவில் மத்திமாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வாழைநார் பயிற்சி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளையால் சமீபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. [இ-31]

## சுழற்சி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லக வட்டாரங்கள் முன்கண்டவாறு தெரிவித்தன.

அந்த வட்டாரங்கள் மேலும் விளக்குகையில்—

யாழ். மாவட்டம் முழுவதற்கும் விநியோகிக்க முப்பது மெகாவாற்ஸ் மின்சாரம் தேவை. சுழற்சி முறையில் வழங்குவதானாலும் ஆகக் குறைந்தது ஐந்து மெகாவாற்ஸ் தேவை. 3 மெகாவாற்ஸ் மின்சாரம் கிடைத்தால் சுழற்சி முறையில் வழங்கும்போது இலகு தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். ஆலைகள் போன்றவற்றை இயக்க முடியாது — என்று கவலை தெரிவித்தன.

[அ-3[

## பொன்னாலை..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் இருந்து பொன்னாலைச் சந்தி, குடியேற்றம், பெரியவர் கோவிலடி, துருத்திப்பிட்டி மயானம் ஆகிய பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களினால் குடியேற்றப் பகுதிகளிலும், வரதராஜப் பெருமாள் கோயில் பகுதியிலும் சில வீடுகள் சேதமடைந்தன.

இதேசமயம் பலாலிப் பக்கத்திலிருந்தும் பொன்னாலையை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் எட்டு கடற்படையினர் உயிரிழந்ததாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா இராணுவவட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

(உ-3-5-15-165)

## மண்டைதீவு.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னத்தம்பி வானதி [வயது 13] ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர். ரவிக்குமாரின் இடது கால் துண்டிசகப்பட்டது.

மூன்றாவது ஷெல் கடை ஒன்றில் விழுந்து வெடித்ததால் கடை முற்றாகச் சேதமடைந்தது. [உ-15]

# திருடரை மடக்க முயன்றவர் கொலை செய்யப்பட்டார்

தென்மராட்சி, ஜன. 11

வீட்டில் திருட வந்தவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றவர் திருடர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி நவீன சந்தையில் நகைக்கடை வைத்திருக்கும் ஒருவரே உயிரிழந்தாக அறியவருகிறது [உ-17]

## அங்கீகாரம்

யூகோஸ்லேவியா சமஷ்டி அமைப்பில் இருந்து பிரிந்து சென்று சுதந்திர நாடுகளாக தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்ட குறோஷியா மற்றும் ஸ்லோவேனியா ஆகியவற்றை இத்தாலி அரசாங்கம் நேற்று உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தது.

## இறுதியாட்டம்

அரியாலை சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை சென். றோக் வி. க. அணி மோதும்.

## நம்பூதிரிபாட் விலகினார்

இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான நம்பூதிரிபாட் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து விலகினார். அவருக்கு வயது 82.

ஹர்கிஷன் சிங் சுர்ஜித் கட்சியின் தலைமைத்துவப் பதவியான பொதுச் செயலாளர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

[உ-த]

## லண்டனில் குண்டு

லண்டன், ஜன. 11

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமைந்துள்ள டௌனிங் வீதியில், அவரது வாசஸ்தலத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று வெடித்தது.

பாதுகாப்பு அமைச்சு கட்டடத்துக்கு அருகே — அநாதரவாக விடப்பட்டிருந்த கார் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டே வெடித்தது.

இக்குண்டு வெடிப்புக்கு ஐரிஷ் விடுதலைப் போராளிகள் உரிமை கோரியுள்ளனர்.

[உ-த-5]

## இந்திய-.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் உட்பட 6 இலங்கையர்கள் போலி பாஸ்போட் மற்றும் ஆவணங்களுடன் புகாரெஸ்ட் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பின்னர் கல்கத்தா விமான நிலையத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

உரிய ஆவணம் இன்றி இவர்கள் புகாரெஸ்ட் வந்துசேர இந்திய அதிகாரிகள் உதவியதாகக் கூறப்படுகிறது. [உ த]

## தேசத்துரோக..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொடுப்பவர்களும், தேசத்துரோகிகளும் போராட்டத்திற்குத் தடைக் கற்களாக இருந்து வருகின்றனர்.

தமிழீழத்தின் தேசத்துரோகி எனக் கருதப்பட்ட அல்பிரட் துரையப்பாவிற்கு 1975 ஆம் ஆண்டு பொன்னாலையில் வைத்து விடுதலைப்புலிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வஸ்தியாம்பிள்ளைக்கு 1978 இல் முருங்கனில் வைத்து புலிகள் மரண தண்டனை நிறைவேற்றினர்.

அல்பிரட் துரையப்பா கொலை தொடர்பாக பல இளைஞர்கள் கைதாவதற்கும் —

தமிழீழ போராட்டத்துக்கும், இனத்துக்கும் எதிராக செயல்பட்டதற்காகவும் =

முன்னாள் இரகசியப் பொலீஸ் அதிகாரி தாமோதரம்பிள்ளை [உரும்பராய்], அவருக்கு உதவி செய்த — துரையப்பாவின் நண்பரான— பேரின்பநாயகம் [உரும்பராய்] மற்றும் செல்லையா [மயிலிட்டி] ஆகியோர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

முருங்கன் காட்டில் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் வஸ்தியாம்பிள்ளையுடன் தாமோதரம்பிள்ளை கடமையாற்றியவர்.

பேரின்பநாயகம் தகவல் சேகரித்து செல்லையா மூலம் தாமோதரம்பிள்ளைக்குக் கொடுத்து வந்தார் — என்று கூறப்பட்டது. [அ-3-5]

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி ஆறுமுகம்

திருமதி மங்கையர்க்கரசி ஆறுமுகம் 10-1-1992 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் [இளைப்பாறிய லிகிதர்] அன்பு மனைவியும், காலஞ்சென்ற Dr. சொக்கலிங்கம் [மலேசியா], காலஞ்சென்ற கேசவன் [முன்னாள் ப. நோ. கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம் [கனடா], தெய்வநாயகி, Dr. சிவபாதம் [குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லங்கலட்டி], தம்பாப்பிள்ளை [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்களேஸ்வரி [கனடா], பாலசுப்பிரமணியம் [முன்னாள் C.T.B கோண்டாவில்], Dr. யோகீஸ்வரி [குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லங்கலட்டி], பத்மராணி [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்தன் [கனடா], கீதா [கனடா], ஞானேந்திரன், குகேந்திரன் [சுவிஸ்], தனேந்திரன், நிரஞ்சினி, சுகந்தினி, மயூரன், சியாமளா, யசோதினி, கோகுலன் [லண்டன்], நிராகுலன் [லண்டன்], சத்தியன் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 10-1-1992 இல் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

குகன் வைத்தியசாலை,
மல்லாகம்.

Dr. A. சிவபாதம்

(19304)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 1 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org